106. முகலாய வம்சத்தின் ஆட்சி _______ ஐ தலைநகராகக் கொண்டு துவங்கியது.

(1) ஆக்ரா (2) டெல்லி (3) பர்கானா (4) காபூல்

107. சரியான கூற்றைத் தேர்ந்தெடு

திலாவார்கான் மற்றும் ஆலம்கான் காபூல் வரக் காரணம் _______.

(1) இப்ராகிம் லோடியை பதவியை விட்டு நீக்க பாபரின் உதவியை கேட்பதற்கு.

(2) காபூலின் மீது படையெடுப்பதற்கு.

(3) டெல்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றுவதற்கு.

(4) முதலாம் பானிபட் போரில் பங்கு பெறுவதற்கு.

108. முதலாம் பானிபட் போரில் தோல்வியுற்றவர் _______.

(1) ஹுமாயூன் (2) இப்ராஹிம் லோடி (3) பாபர் (4) அக்பர்

109. கீழ்க்காணும் கூற்று மற்றும் காரணத்தை ஆராய்க.

கூற்று: அரியணையில் இருந்து தூக்கிவீசப்பட்ட ஹுமாயூன் ஈரானுக்கு தப்பி ஓடினார்.

காரணம்: 1539 இல் சௌசா என்ற இடத்திலும் 1540 இல் கான்னோசியிலும் ஷெர்ஷாவிடம் ஹுமாயூன் தோற்றார்.

(1) கூற்று, காரணம் இரண்டும் சரி

(2) காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை

(3) கூற்று சரி, காரணம் தவறு

(4) கூற்று, காரணம் இரண்டும் தவறு

110. ஹுமாயூனை ஆட்சியிழக்கச் செய்தவர் _______.

(1) அக்பர் (2) ஷெர்ஷா (3) ராணா பிரதாப்சிங் (4) ஔரங்கசீப்

111. ஷெர்ஷா சூர் வம்சத்தின் ஆட்சியை _______ ல் தொடங்கினார்.

LIVEWORKSHEETS

(1) டெல்லி (2) ஆக்ரா (3) வங்காளம் (4) மதராஸ்

112. குறுகிய கால ஆட்சியில் வங்காளம் முதல் சிந்து வரை (காஷ்மீர் நீங்கலாக) பேரரசை உருவாக்கியவர் ______.

(1) ஷாஜகான் (2) ஷெர்ஷா (3) ஔரங்கசீப் (4) அக்பர்

113. இரண்டாம் பானிபட் போரில் பங்கு பெற்றவர்கள் ______.

(1) பாபர் மற்றும் இப்ராகிம் லோடி (2) அக்பர் மற்றும் ராணா உதய்சிங்

(3) பைராம்கான் மற்றும் ஹெமு (4) ராணி துர்காவதி மற்றும் அக்பர்

114. முகலாயப் படை ______ என்பவருடன் அமைதி உடன்படிக்கை செய்து கொண்டது.

(1) ராணி சந்த் பீவி (2) துர்க்காதேவி

(3) மெகருன்னிசா (4) சாம்பாஜி

115. ராணா உதய்சிங் ______ ன் அரசர்.

(1) இங்கிலாந்து (2) மேவார் (3) போர்ச்சுகல் (4) ஆப்கானிஸ்தான்

116. கீழ்க்காணும் கூற்று மற்றும் காரணத்தை ஆராய்க.

கூற்று: அக்பரின் தூண்டுதல் காரணமாக பைராம்கான் என்பர் குஜராத்தில் கொல்லப்பட்டார்.

காரணம்: பைராம்கானின் மேலாதிக்கத்தை அக்பரால் சகித்துக்கொள்ள இயலவில்லை.

(1) கூற்றிற்கு காரணம் சரியான விளக்கமல்ல.

(2) கூற்று தவறு, காரணம் சரி.

(3) கூற்றை காரணம் சரியாக விளக்குகிறது.

(4) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

117. முஸ்லீம் அல்லாதோர் மீது விதிக்கப்பட்ட வரி ______.

(1) நிலவரி (2) சொத்து வரி (3) ஜிசியா (4) வேளாண் வரி

LIVEWORKSHEETS

118. அனைத்து மத அறிஞர்களும் ஒன்று கூடி உரையாடும் இபாதத்கானா மண்டபம் உள்ள நகரம் ______.

(1) பதேபூர் சிக்ரி (2) ஆக்ரா (3) அமிர்தசரஸ் (4) குவாலியர்

119. ஷாஜகான் அகமது நகரை இணைத்துக் கொண்ட ஆண்டு ______.

(1) 1632 (2) 1526 (3) 1569 (4) 1657

120. ஷாஜகான் மற்றும் நான்கு மைந்தர்களுடன் ______ ஆம் ஆண்டு வாரிசுரிமைப் போர் வெடித்தது.

(1) 1576 (2) 1657 (3) 1556 (4) 1540

121. வரிசைப்படுத்துக:

I. பாரசீகம், ஆப்கானிஸ்தான் மற்றும் மத்திய ஆசிய பகுதிகளுக்கான வணிகப்பாதைகளின் கட்டுப்பாட்டை முகலாயர்கள் இழந்தனர்.

II. சீக்கியத் தலைவர் குரு அர்ஜுன்சிங்கை தூக்கிலிடும் படி ஜஹாங்கீர் உத்தரவிட்டார்.

III. காந்தகாரை முகலாயர் இழந்தனர்.

IV. முகலாயருக்கும் சீக்கியருக்கும் நெடுநாள் போர்கள் நடைபெற்றன.

(1) I, III, IV, II (2) II, IV, I, III (3) II, III, I, IV (4) IV, III, I, II

122. முகலாய நிர்வாகத்தின் இராணுவத் துறை அமைச்சர் ______.

(1) வக்கீல் (2) திவான் (3) மீர்சமான் (4) மீர்பாக்ஷி

123. ஷாரியா என்பது ______.

(1) இஸ்லாமிய சட்டங்கள் (2) வருவாய் மற்றும் செலவுகள்

(3) பேரரசு (4) இராணுவம்

124. முகலாய நிர்வாகத்தில் இஸ்லாமிய சட்டங்களை நடைமுறைப்படுத்தியவர்

(1) சுபேதார் (2) சிவாஜி (3) மீர்பாக்ஷி (4) சதா-உஸ்-சுதூர்

LIVEWORKSHEETS

125. மேவார் அரசரான ராணா உதய்சிங்கை அக்பர் _____ இல் தோற்கடித்து சித்தூரைக் கைப்பற்றினார். (NMMS-2020-21)

(1) 1576 (2) 1569 (3) 1568 (4) 1556

126. பின்வரும் நிகழ்வுகளை காலக்கிரமப்படி வரிசைப்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும். (NMMS-2020-21)

i. ஹால்டிகார் போர்
ii. கன்னோஜி போர்
iii. இரண்டாம் பானிபட் போர்
iv. தரைன் போர்

(1) iv ii iii i
(2) iv iii ii i
(3) ii iii iv i
(4) iii ii i iv

127. பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும். (NMMS-2018)

(1) பாபர் (2) ஹுமாயூன் (3) அக்பர் (4) ஷெர்ஷா

128. தாஜ்மஹாலைக் கட்டிய தலைமைச் சிற்பியின் பெயர் _______. (NMMS-2018)

(1) ஜஹாங்கீர் (2) சர் தாமஸ் ரோ (3) மும்தாஜ் (4) உஸ்தாத் இஷா

LIVEWORKSHEETS